தாவீதும் பத்சேபாளும்



Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

27-03-2024

தாவீதும் பத்சேபாளும்	
எண்	பொருளடக்கம்
1	அழகு சிரிக்கின்றது
2	அம்மா வா
3	அமுதும, ஆலகாலமும்
4	அன்னை ஆஞ்சலா
5	இதய கீதம்
6	பிறந்த நாள்
7	கலைஞனும், இரசிகனும்
8	காமபோகம் மோக பாவம்
9	காதல் என்னும் வடிவம் கண்டேன்
10	காதல் கங்கோத்திரி
11	காட்டிக் கொடுப்பும் மறுதலிப்பும்
12	மதமும் ஆன்மீகமும்
13	மதவாதம்
14	ஓநாய்களும், மந்தைகளும்
15	பாலிருக்கும், பழமிருக்கும்
16	பூப்பந்தாட வந்த பூவை
17	புறாக்களும், வல்லூறுகளும்
18	சூசான்னா- காமம், கடவுள். நீதி
19	தேனீ
20	தூங்காத உள்ளம்
21	வறுமை

அழகு சிரிக்கின்றது




முத்துக்கள் ஒளிரும், முல்லை மொட்டுக்கள் சிரிக்கும்,
கத்தும் கடல் ஏழும்-நெஞ்சுக்குள் காதல், காதல் என்று
கவி பாட, நித்திலமே, என் நெஞ்செழுதிய காதல் காவியமே
உன் புன்னகையில் எத்தனை வண்ணங்களடி

மையெழுதிய உன் நீள் விழிகளில் குவளை மலரும்,
கயல்கள் நீந்தும், தையலே என் நெஞ்சம் மையல்
கொள்ள, உன் பார்வைகள் என்னைத் தழுவிட
நெஞ்சிலோ பரவசம், நினைவிலே இனிக்கும் கனிரசம்

கார்குழல் மலர் சிரிக்க,-செம்மாங்கனிக்
கன்னங்களில் நாணம் வண்ணம் பூச, செவ்வாய்
மொழிகளில் இசை முழங்க, மதி முக தரிசனத்தால்
அல்லி மலராய் மலரும் என்தன் காதல் நெஞ்சம்

கண்படும் அழகைக் கண்டு-நெஞ்சம் காதல் சொல்ல,
வண்டு படு மதுமலர்க் கூந்தல் நடையோடு நாட்டியமாட,
விழிகளால் உண்டு பசியாற கன்னியோ அழகுக் கனி,
இதயம் கவி பாட கன்னியோ கவிதை மொழி

காலத்தே இள ‘மை” கரைந்திட, முது ‘மை” எழுதிட
அழகின் ஓவியமாய் மெய், காதல் கனிந்து
காமம் மறைந்து, இதயம் அன்பில் நிலைத்திட,
காவியமாய் உண்மைக் காதலடி என் கண்மணி



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-03-2024

அம்மா சீக்கிரம் வாங்க



போர் ஓய்ந்தும் தணல் ஆறாத யுத்த பூமியில்
வேரறுந்த பனையாய் மானுடம் வீழ்ந்து கிடக்க
ஆறாத மனக்காயம், தீராப் பெரும் பிணியாய் மாறிட
நடைப்பிணமாய் சிதைந்த மானுட வாழ்வு



புலம்பெயர்ந்தவர் அனுப்பும் பணத்தால்
மதுவும், கேரள கஞ்சாவும், போதைவஸ்தும்
இளைஞர் வாழ்வை நஞ்சாக்கிட-அமைதி தேடி
விரக்தியால் அழிவுறும் மனிதகுலம்

புதிய பயங்கரவாதமாய்-போதைவஸ்து,
மது, பாலியல் வன்முறைக் கலாச்சாரம் தழைத்திட
விந்தியா முதல் சிறுமி ஷிரோமிவரை
பாலியல் வன்முறைக்கு பலியான மங்கையர்

புலம்பெயர்ந்து நீ போகத்-தாயே இடம்பெயர்ந்து வாடிய
உன் மொட்டு இன்றோ பூவனமாய் பூத்துக் குலுங்கிட,
கண்படும் என் அழகை மொய்கும் காமவிழிகள்
களவாய்ச் சிதைத்திடத் துடிக்கும் காமப்பேய்கள்

வேலியே பயிரை மேயும் அபாயமாய் மாமன், மச்சான்
விழிகள், அண்டை வீட்டுக் காளையர் கண்சாடைகள்
விளையாட்டாய், தடவல்களிலும், உரசல்களிலும்
காமச் சூடு தணிக்கும் கழிசடைகள்



நாளும் செய்திகளோ கற்பழிப்பு, கொலையாக
பள்ளி செல்லும் பாதையும் தீக்குளிக்கும் வழியாக
பயமாய் இருக்குது அம்மா-மானம் அழிந்து
நான் மடியுமுன்- தாயே வந்துவிடு

கண்படும் இடமெல்லாம் நெஞ்சம் புண்பட
பொன்மேனியை மொய்த்தே, புண்ணாக்கும்
போதை விழிகள், பாலியல் வல்லூறு
செய்யத் துடிக்கும் காமப்பேய்கள்

கண் படும் போதெல்லாம்-புண்ணில் விழும் அமிலத்துளிகளாய்
பூ நெஞ்சம் புண்பட, இடையினம் தொட்டு, மெல்லினம் சிதைய
வல்லினம் என்னை வல்லாங்கு செய்யமுன் தாயே வந்துவிடு
உன் குமரிக்கு கவசமாய் மாறி, குழந்தையைக் காத்திடு

பூ மொய்க்கும் தேனீக்களும், புண் மொய்க்கும் ஈக்களும்
நிறைந்த உலகில் கண் மொய்த்து துகிலுரியும் காமுகர் பார்வை
கருந்தேளாய் மேனி ஊரக் கலங்குகின்றேன்-அம்மா
உன் வரவிற்காய் தவமாய்த் தவமிருக்கின்றேன்



யாழ். போதனா மருத்துவமனையில் 91 சிறுமிகள் குழந்தை பிரசவித்தனர்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டில் 91 சிறுமிகள் குழந்தைகளை பிரசவித்தனர் என்று மருத்துவமனை தரவுகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையிலேயே இந்தத் தரவும் வெளியாகியுள்ளது.

91 பிரசவங்களும் கடந்த 2023 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

நீராடும் போது நிம்மதி நாடி-தாயே
கண்ணீரில் நீராடும் என் விழிகள்-அஞ்சித்
துயிலும் போது கண்ணீரில் நீராடும்
என் தலையணையும், பஞ்சணையும்

தேனீக்குக் கொடுக்கும், ரோஜாவிற்கு முள்ளும்
ஈந்த இறைவன் பெண்மைக்கு தந்தது ஏதம்மா?
என் அழகே எனக்குப் பகையாக பரிதபித்து
புலம்பியழைக்கின்றேன், வா அம்மா சீக்கிரம் வா

தாய்மடி காணாத பருவக்குமரி-இன்னும் உந்தன்
சின்ன ராஜகுமாரி, கொழுகொம்பில்லாத
முல்லைக்கொடி, வள்ளல் பாரிபோல் வேடமிட்டு
என்னை படரத் துடிக்கும் கேடிகளோ நாதாரி

உன் மடியில் நான் முகம் புதைத்து என் மனப்பாரம்
தீர அழவேண்டும், அச்சமின்றி நான் வாழ-
என் அருகில் அன்னையே நீ வேண்டும்
வருவாயா அம்மா? சீக்கிரம் வந்துவிடு



மனங்கலங்கிக், குமுறிக் கண்ணீரில் எழுதும் என் மடல்,
கண்டவுடன் தாயே வந்துவிடு, கற்பும், மானமும்
கண்ணகிக்கே என்ற உலகில், சீதைக்கும், பாஞ்சாலிக்கும்
தீக்குளிக்கும் வேதனை, சிறுமியரரோ தாயாகும் சோதனை

காம நெருப்பு நெஞ்சில் எரிய-ஊனோ கொதித்து கன்னியரைச்,
சிறுமியரைச் சிதைக்க, எம் உயிரோ கணைபட்ட
அஞ்சுகமாய்த் துடிக்க நாளும் சோதனை, தாயே சீக்கிரம்
வந்துவிடு, உன் செல்ல மகள் சீரழியாமல் காத்திடு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-5-2023

அமுதும், ஆலகாலமும்

ஒளியில் பார்த்து, இருளில் விதைக்கும் உழவு
இதழ் "கள்" அருந்தி இருவரும் போதையுறும் இன்ப நிகழ்வு
உழவனாய் உழுது விதைத்திட, மண்ணாய் பெண்மை
தன்னைத் தந்தே ஈயும் அழகு, அறுவடைக்கான நிகழ்வு





விதைத்துக் களைத்து, மதி நுதலில் வியர்வை
அரும்பிட, நாணிக் களிக்கும் உறவோ,
காமத்துப் பால் சொல்லாத காமசூத்திரமான
நூதன நிகழ்வு, ஊசியில் பாவு நுழையும் கலையழகு

காமம் கடந்து நுழைந்திட சூனியமான பரவெளி
மனம் அழிந்து சிந்தை சச்சித்தானந்தத்தில் நிலைத்திட
எங்கும் இன்ப ஒளி, இருமை கடந்த ஆனந்த வெளி





பாற்கடல் கடைந்த தேவரும், அசுரரும் நாம்
அமுதும், ஆலகாலமும் வரும் நிகழ்வு, தேவர், அசுரர்
இருமை கடந்தால், கடவுளே நாம்

தாகம் தீர்க்க மது இருந்தாலும் நீரே தேவை
காமம் தீர்க்க மாதிருந்தாலும் நல்மனைவியே தேவை
போதும், போதும் என்றாலும் தீராத தாகம் காமம்
மது போதையோ சில மணித்துளியடி
மாதர் காமப் போதையோ-மனமிருக்கும் பல யுகமடி



சக்கி முக்கிக் கல்லாய் உரசிடும் தேகம்-காமப் பொறியோ
பற்றிட, நெஞ்சில் அணையாத தாகம்-அணைக்க,
அணைக்க வளரும் காட்டுத்தீ, அதிசயக் காமத் தீ
வீணையும், கலைஞனுமாய் மீட்டினால் நல் நாதம்
கூலிக்கு மாராடிக்கும் காமத்தில் ஏது கலை நயம்?

சிவ சக்தி தாண்டவம், அர்த்தநாரிஸ்வரனாய்
ஒன்றுக்குள் ஒன்றாகும் சுக அனுபவம், சுந்தரம்
சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை- பள்ளியறைப்
பாடமாய், முன்னோர் வகுத்த அழகு நிலை
சாந்தி முகூர்த்தத்தில் கூடி இன்புறும் முதல் நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-3-2024

அன்னை ஆஞ்சலா ஒரு தேவதை

எப்படி இருக்கிறீங்க மகன்?-பாசத்தோடு நலம்
விசாரிக்கும் நேசம் மௌித்துப்போனது-தன் வீட்டை
தந்த உறவு, தந்தையின் வீட்டை நோக்கி வானகம்
போனது, இதயத்தில் சோகம் இமயமாய்க் கனக்குது



தாயாய் வந்த உறவு-கனிந்த அன்பால்
உறவாட இறைவன் தந்த நிகழ்வு
பேசும்போதெல்லாம் நெஞ்சில் மணக்கும் இறையன்பு,
ஆசீர் கூறி இன்புறும் தாயே இறைமகனின் வடிவு



என்னையும் தன் மகனாய் ஏற்று
இன்புற்ற உறவு, பரிசுகள் எனக்கனுப்பி
பாசம் பொழிந்த அன்னை- நினைந்திட
கலங்கும் இதயம், கண்களிலோ ஈரம்

அம்மா இல்லாத பிள்ளை, அம்மா
என்றழைக்க உறவான முல்லை, இறையடி
சேர்ந்த கிள்ளை, இறைவா உம் சித்தம் நிறைவேறுக
என்றே இறை புகழ் பாடும் பிள்ளை

வீடெங்கும் தாயே உன் நினைவுகள்
நட்ட மல்லிகையிலும், ரோஜாவிலும்
மணக்கும் உன் அன்பின் நிகழ்வுகள்
கண்ணீரில் மிதக்கும் என் செவ்விழிகள்

துன்புறும் ஏழைகளின் துயர் துடைக்க, அள்ளிக் கொடுத்த
வள்ளல், இன்றோ இன்புற்று இறையடி சேர,
தந்தை இறைவனின் மார்பில் விளையாட, கண்ணயர்ந்த
தாயில் தேவதாயின் உருவங்கள்



உலகம் ஒரு சத்திரம், வந்து போகும் யாத்ரீகனாய்
நாம்-வாழ்வு சத்திய யாத்திரையானால்
சேருமிடமோ வானக வீடு, பொன் மானைத் தேடி
அலைந்தால் சுடுகாடே நம் கூடு

தாயே அமைதியில் உறங்கு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-3-2024

இதய கீதம்

அந்தி வானின் வண்ணக் கோலங்கள் அஸ்தமனத்தை சொல்ல-
நதியில் நீராடி, கொடியில் மலர் சூடி தேகத்தை தழுவும் தென்றல்
நேசத்தைச் சொல்ல, கண்கள் தழுவிடக் கண்ட அழகி
நெஞ்சங்கள் கலந்திடச் சொன்ன கவிதையோ காதல் சங்கதி



என் காதலை உன்னில் கண்டேன், மெல்லத் துடிக்கும்
இதயங்கள் பண்ணோடு சொல்ல, பார்வைகள்
தென்றலாய்த் தழுவிக் கொள்ள, பூரித்த இதயங்களின்
காதல் சங்கமம், பிரபஞ்சத்திலோ ஆனந்த நாட்டியம்



வண்ண ரோஜாவின் வாச இதழ்கள்களில்
காதல் இதயங்களின் கவிதைகள்-கருவானில்
பூக்கும் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றிலும்
ஒளிரும் காதல் இதயங்களின் விம்பங்கள்

இரவின் ஆழ்ந்த நிசப்த்தத்தில்-இடம் மாறிய
இதயங்களில் உலவும் வண்ணக் கனவுகள்,
காதல் என்பது ஒன்றாய்க் கலந்த இதயங்கள்
ஓயாது மீட்டும் இன்னிசையானது

மௌனத்தில் இலயித்து, மோகனத்தை வியந்து
வண்ண நிலவோ, வாச மலரோ இவள், மயக்கும்
மாலை கழிய, இனிக்கும் இன்ப இரவு மலர
இதயச் சங்கமத்தில் பூத்த காதல் இதய கீதமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-03-2024

நலம் வாழ எந்நாளும் வாழ்த்துக்கள்






அன்பு, உண்மை, நேர்மை,
நிர்வாகத் திறமையினால்,
என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கிய
அற்புத மனிதர், கால வெள்ளத்தில்.
தந்தையாய் அன்பு செய்து
தாரத்தை தாயாய் தந்த பெருமான்

கற்றுக்கொண்டதோ கையளவு,
கற்க இருப்பதோ கடலளவு
கையளவு மனசுக்குள் கடலளவு அன்பு
எல்லோரையும் அன்பு செய்யும் தேவ பண்பு

புயலும், மழையும், பெரு வெள்ளமும்
வந்தபோதும் கலங்காத நெஞ்சம்,
எப்படியும் வாழலாம் என்ற உலகில்,
வாழ்வது இப்படித்தான் என்று சொல்லும்
தந்தையின் அன்பு நெஞ்சம்

தந்தையாய், நண்பனாய் ஆசானாய் இன்புற
இறைவன் தந்த அற்புத உறவு-இன்று நாம்
மகிழ்ந்த கொண்டாட தந்தையின்
பிறந்த நாளே திருநாளான அழகிய நிகழ்வு

இறைமகனாய்ப் பல்லாண்டு , பல்லாண்டு
வாழ்க -அன்பு மகனாய்
வாழ்த்தும் உறவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-03-2024



On this day, we celebrate you,
For all the love and strength you give,
May joy and peace be ever true,
And in your heart forever live.

So here's t you, my father, my friend,
May your days be filled with bliss,
And know my love will never end,
Sealed with this birthday wish.

With every year, your wisdom grows,
A beacon that lights our way,
In every challenge, it shows,
Guiding us day by day.



Your laughter is a melody,
That brightens up our darkest nights,
A tune of pure felicity,
That sets our spirits to new heights.

For all the sacrifices made,
For love that's deeper than the sea,
For memories that never fade,
We thank you, Dad, eternally.

So on this day, we gather 'round,
To honor you, our hero, our guide,
May blessings and love abound,
And always stay by your side.

கலைஞனும் இரசிகனும்



பரபரப்பான ரெயில் நிலைய வாசலில்
பரவசமான வயிலின் இசை, இசை மீட்டும்
கலைஞனோ ஏழை, இரந்திட வாசிக்கும்
வாசிப்பில் மாமேதையின் கீதை



வருவோர், போவோராய் மக்கள் கூட்டம்
பரபரப்பான வாழ்வில், நின்று
இசையை இரசிக்க இரசிகனாய் யாருமில்லை
சுண்டி வீசிய நாணயங்களோ சில்லறை

தாயோடு வந்த சிறுவன், தயங்கி நின்று
இசையை இரசிக்க, காசு போட்டு கையைப்
பிடித்து அழைத்த அன்னை, கந்தை
கலைஞனின் அலங்காரமான தொல்லை

காலை முதல் மாலை வரை-ஏழையின்
இலவச இசை மழை, நனைந்து இரசிக்க-இரசிகனாய்
எவருமில்லை, காற்றோடு போன தேவராகம்,
வாழ்வோ மனிதனுக்குப் போராட்டம்

அந்தியில் முடிந்த கச்சேரி, பொறுக்கிடச்
சில்லறையும், தாளுமாய் காசு, ஏனோதானோ
என்று இரங்கிய மனம் இட்ட பிச்சை,
அமுத இசையை காதல் வாங்காத தீட்சை

மறு நாள் பத்திரிகையில் புகழ் பெற்ற இசை மேதையின்
வயிலின் கச்சசேரி- நகர மண்டபத்தில் விளம்பரம்,
நுழைவுச் சீட்டோ பல நூறு டொலர் பெறுமதி
கூட்டம் அலைமோதக் களை கட்டிய கச்சேரி

மேதையின் கச்சேரியை இரசித்த மேதவிகளோ இரசிகர்கள்
பார்வையாளராய் தம் சிறப்பை உயர்த்திட பல நூறு
டொலர் செலுத்தி முன்னிருக்கையில் அமர்ந்த செல்வர்கள்
ரெயில் நிலையத்தில் ஒலித்த அதே கானம்,
ஏழையும், மேதையுமாயக் கலைஞனின் கோலம்

அநாமதேய தெருக் கலைஞனானபோது
கலையை இரசிக்க யாருமில்லை, தேவ
கானத்தை நின்று கேட்க மனங்களில்லை

கள்ளுச் சந்தையில் பாலுக்கும், மீன் சந்தையில்
வாச மலருக்கும் மதிப்பில்லை, வைரத்தை
கண்ணாடிக் கல்லாய் மதிப்பிட்ட நிந்தைகள்
பன்றிகளுக்கு முன் தூவிய முத்துக்கள்

காதில்லாத மனிதர் முன் இசைத்த தேவராகம்
கண்ணில்லாத மனிதர் முன் காட்சிப் படுத்திய வண்ண ஓவியம்,
முள்ளென்று பலாவைப் புறந்தள்ளிய மூடர், தெருக்கலைஞன்
பிச்சைக்காரன் என்று தம்மைத் தாமே இழிவு செய்த மடையர்



கடையில் இருந்தால் கல்லும் சிற்பம், கோயிலில் இருந்தால்
அதுவே வழிபடும் தெய்வம், இருக்குமிடத்தில் இருந்து
கொண்டால் எல்லாம் சௌக்கியம், ஏழையாய்ப் பிறந்தால்
இயேசு தச்சன் மகன் மதவாதிகளின் வியாக்கியானம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-03-2024

தாவீதும் பத்சேபாளும்-காமபோக மோக பாவம்

அமைதியின் நகரம் ஜெருசலேம்,
அரசர் தாவீதின் வசமான காலம்,
இளவேனில் காலத்து, இளமாலை நேரம்



படைகள் களம் காண-பகலவன் மேற்கு நோக்கி நடைபோட
உறங்கி எழுந்த மன்னன்-மாடத்தில் உலாவி
ஊர் அழகை இரசித்த நேரம்



வானில் வெண்மேகங்களின் ஊர்வலம்
வாசத்தென்றல் இதமாய் வருடிச்செல்ல-
வண்ண மலர்களின் நறுமணம்
இன்னிசை பாடும் புள்ளினங்களின் குதுாகலம்

ஊர் அழகை இரசித்த விழிகள் -ஒரு கணம்
இமைக்க மறந்து மயங்கி நின்றிட
இதயம் துடிப்பை நிறுத்தி தவித்து துடித்திட
வீட்டு மாடத்தில் நீராடி நின்ற பெண் புறா



நிலவோ , வான் மலரோ? நீராடிக் களிப்பது
விழியோ?, என் மனமோ? காமனோடு போராடித் தோற்பது?
மஞ்சள் வெயிலில் மின்னும் தங்கச் சிலையாய்
அஞ்சாத நெஞ்சத்து ஆடவனும்
அஞ்சித் தஞ்சம் கோரும் பேரழகாய் இவள்?



மனம் வியக்க, மதுமலர் கூந்தல் மயக்கம் தர
கட்டுடல் அழகோ களிப்போடு தவிப்பைத் தர
செவ்விதழும், சிற்றிடையும் மலைப்பைத் தர
விழிகாணும் தொலைவில் காமன் விருந்து
காம நோயுற்ற மனதிற்கு இவளோ அருமருந்து

அழகிலும் பேரழகோ நீராடிக் களிக்க-நெஞ்சம்
காமன் கணை பட்டு போராடித் துடிக்க
மீட்டி மகிழும் யாழிலும் மீட்டாத காம வேதமாய் அவள்
கூடி மகிழ்ந்த மங்கையரிலும்-காணாத கோடிச் சுகம் தரும்
காதல் விருந்தாய் பத்சேபாள் இவள்

பூத்து குலுங்கும் அழகு-விழிகளுக்கு விருந்தாக
விழுப்புண் தரித்த வீர நெஞ்சு தழுவத் துடிக்கும் கொடியாக
பார்கப் பார்கத் தெவிட்டாத பரவசம்
உயிர் மெய்யை உருக்கிய காதற் காமத்தின் மின்சாரம்

யாழில் மீட்டாத மோகனம், யார் வீட்டுக் கோகிலம்
கணைபட்டும் கலங்காத நெஞ்சம்
காமன் கணைபட்டு கலங்கிட காதலின் குதூகலம்



மங்கையோ ரோஜா வண்ணம், மலர்ந்து விரிந்த கார்குழலோ
கலாப மயிலின் சின்னம், முத்துப்பற்களும், மோகனப் புன்னகையும்
குவளை விழிகளும்-பொங்கிப் பூரித்த கொங்கைகளும்
செவ்வாழைத் தொடைகளும் நெஞ்சைக் கொல்லும் எண்ணம்



அன்ன நடையும், குலங்கும் மின்னல் இடையும்,
செம்பவள இதழ்களும் வான் மதியோ தேன் மலரோ கோதை
யாழில் இசைக்காத காமசுரமோ தேவ ராகமோ ராதை

மங்கை நீராடும் அழகில் மனம் தடுமாறக்
கட்டுடலில் பொங்கிய இளமையின் அழகால்
காமசுரத்தில் தள்ளாடிய காவலன்

கண்களும், நோக்கிடக், கயல் விழிகளும் கலந்து இன்புற
கட்டுடலில் நாணம் புதுக்கோலம் காட்டிட
கண்டு இரசித்து காமன் கணைபட்டு வீழ்ந்தது காவலன்
அறிந்த கோதை நெஞ்சில் அழகின் பெருமிதம்

தளிர் மேனியும் தழைத்த முலைத் தடங்களும் நெஞ்சைத் தடுமாற வைக்க
பிழைக்குமோ என்னுயிர்-இவளின்றி பிரிந்து போகுமோ என மனம் பரிதவிக்க
மூங்கில் தோள்களும்-மோகனப் புன்னகையும் மையுண்ட வேல் விழிகளும் மயக்கம் தர
ஐம்புலனும், ஆறாம் அறிவும் அரிவையிடம் காதல் தஞ்சம் கோரியதே






இவளின்றி வாழ்வில்லை, வையகத்தில் இவள் சுவையின்றி
சுவைக்க ஏதுமில்லை எனப் புலம்பிட, பார்த்தல் விழிக்கின்பம்
கேட்டல் செவிக்கின்பம் முகர்தலும், மெய்யொடு -மெய் தழுவி
தொடுதலும், செவ்வாய் முத்தமும், ஆன்மாவிற்கு இன்பம்

மோகச் சுரங்கமிவள்-காமபோகமிவள்
காமன் மகளிவள்- காதலின் பேரின்பமிவள்
காதற் காமத்தால் வாடிய ஏழை
காவலனயிருந்தும் பிறன் மனை நோக்கிய கோழை

கண்டதும் காமப் பூ மலர்ந்து நெஞ்சை நிறைக்க-விழி
உண்டு மோகப் போதையை தோற்றுவிக்க
மொழி சொல்ல இயலாக் காமபோகத்தை
மோகித்த காவலன் விழியிழந்த அந்தகனாய் காமக்
காரிருளில் தடுமாறிய கோவலன்

கயல்விழியும், கட்டுடலும் கனவிலும், நினைவிலும் வருத்த
காரிகையின் புன்னகையோ-காமன் விருந்துக்கு அழைக்க
முப்பொழுதும் நிலாமுகம் நெஞ்சில் உலாவர-
நாணத்தையும், நல் ஒழுக்கத்தையும்-காமக்கோடரி
ஒன்றாய் தறித்து வீழ்த்திட-நங்கைக்கு தூதுவிடுத்து
காமபோக யாகம் செய்தான் காவலன்





அங்கமெல்லாம் முல்லையும், மல்லிகையும் மணக்க
மன்னனும் மங்கையும் மலரும், வண்டுமாய்க் கூடிக்களிக்க
அள்ளிப் பருகியும் வற்றாத காமத்துப்பாலை
களவாய்ப பருகிப் போதையுற்ற காதலர்

விழியோடு விழி கலந்து வியந்து சிவக்க
உயிரோடு மெய் கலந்து, உயிர் மெய்யை உதரத்தில் படைக்க
காதற் காமமும் கண்களை மறைக்க-மாதிவள்
மலைத்தேன் என மன்னவனும் சுவைத்தே மலைத்தான்

காமபோக வேள்வி யாத்துக் காதலர் களிக்க
காரிகையைக் கன்னமிட்டுத் திருடி கலவி இன்பம் சுவைக்க
மதுவிலும் இனிதென்று போதையில் கவிபாடிக் களிக்க-மன்னவனே
உன்னாள் கருவுற்றேன் நான் என்றாள் மதுவிலும் இனிய மாது.



மாற்றான் உரியா மனைவியின் அழகில் மயங்கிய காதல் கள்வனும்
உரியாவைப் போர்களம் நின்று வரவழைத்து உபசரித்தான்
மனைவியோடு உறவாடப் பரிசுகளோடு வீட்டுக்கனுப்பி
தன் பாவம் மறைக்க முனைந்தான் காமக் கள்வன்




கொண்ட உறவையும் மறுத்து-கொள்கை பெரிதென்று
படை வீரரோடு வீரன் உரியா உறங்கிட
சேதி அறிந்த காவலன், செய்வதறியாது கலங்கினான்
காமம் கண்களை மறைக்க நீதி தவறினான் காவலன்



மறுநாள் இரவு விருந்தோடு உரியாவின் மதிமயங்கிட
மதுவைக் குடிக்கக் கொடுத்து உரியாவை வீட்டுக்கனுப்பிட
போராடும் என் தலைவனும் சக வீரரும் பாசறையில் உறங்கிட
பஞ்சணையும், பாவையும் எனக்கெதற்கு
படைவீரரோடு உறங்கிய வீரன் உரியா

தேள் கொட்டிய திருடனாய்த் திகைத்தான்-உண்மையை
ஊர் அறிந்தால் காமுகன் என காறித் துப்பித் தூற்றுவார்
கல எறிந்து கர்ப்பிணியைக் கொல்வார்-காமத்தால் வாடிக்
கலங்கி, சதி வலை பின்னிய கொடுங்சிலந்தி
உரியாவை களப்பலியாக்கத் துணிந்த துர்மதி

உக்கிரமாய் போர் நிகழும் இடத்தில்
உரியாவை நிறுத்திக் கொல்லத் தளபதிக்கு
வக்கிர புத்தி படைத்த மன்னன் எழுதிய மடல்
உரியாவே மன்னன் மடலைக் கொண்டு சென்று
மாண்ட சதியான அவல நிகழ்ச்சி நிரல்



மணிமுடியும், வளநாடும் நாம் தந்திட
திருச்சட்டத்தையும், நீதியையும் புறந்தள்ளி
காமுகனும், கொலைஞனுமாய் மாறிட்ட
நீயும் மன்னவனோ? வளநாடும் உனதோ?



காமசுகம் காண மந்தைபோல் மங்கையரோ உன்னிடம்
ஏழையிடம் இருந்ததோ ஒரே ஒரு சின்னச் செம்மறி
உன் காமப் பசிக்கு களவாடி அதனை விருந்தாக்கியதும்
நன்றி விசுவாசமுள்ள வீரனைக் கொன்றதும் அநீதி
என்றுமுள்ள தர்மமோ நீதி வழுவாத நியதி

காவலனை-இறைவாக்கினர் நாத்தான் மூலம்
கடுமையாய்க் கண்டித்த இறைவன்-மண்டியிட்டே
இறை மன்னிப்பை கண்ணீரோடு இரந்த காவலன்



மன்னித்த இறைவனும்-காமத்தால்
கருவுற்ற குழந்தையை வதைத்து
தாய்க்கும், தந்தைக்கும் தம் நீதி உரைத்தார்
உரியாவிற்கு சாந்தி அளித்தார்?

பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு-(148)

மன்னவனையும், மாதையும் கண்டித்து, தண்டித்த
அன்பிறைவன், பத்துக் கட்டளைகளில் ஒரு கட்டளையாய்,
பிறர் தாரத்தை விரும்பாதே, திருச்சட்டம் ஈந்து
இல்லறத்தை நல்லறமாக்கிய ஆதி பகவன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-5-2023

காதல் என்னும் வடிவம் கண்டேன்

மையெழுதிய விழிகளில் கயல்களும் மயங்க,
நெய் எழுதிய கூந்தலில் மலர்கள் மணக்க
தையலாள் மதிமுகத்தில் அழகு ஜொலிக்க
கொவ்வைச் செவ்வாயில் அமுதின் இனிமை





பொன்னால் கடைந்த மேனியில் பூ மணக்கும் ,
செவ்வாயில் தேன் இனிக்கும், நூலிடையில்
மேகலை சினுங்க, நூதன அழகிற்கு
அழகூட்டி, வண்ணப் பட்டுச் சேலை மகிழும்

சேல் விழிகளில் கவிதை மொழிகள்,
நூபுரத்தில் மெல்லிசைகள், காற் கொலுசில்
முழங்கும் காதற் பறைகள் , கண்படும்
பெண்ணில் காதலின் அதிசய அபிநயங்கள்

கண் பார்த்து, காதலை நெஞ்செழுத, மண் பார்த்து
நாணிய பெண் ஓவியம், காதலனாய் என்னை
மாற்றிய காவியம், காதல் கூட குபேரநிதியான
திரவியம், இன்றோ தேவதாஸாய் என்தன் சீவியம்

நெஞ்சில் ஆறாத் துயர் நிலைக்க, நினைவில்
சோக அலைகள் ஓயாது எழும்பிக் குதிக்க
காதலும் வெறும் கனவாய்ப் போனது, கண்களில்
கங்கையும், நெஞ்சில் காங்கையும் நிலைத்தது


பூவனமாய் மேனியெங்கும் பூத்த கொள்ளை அழகு
தேவ கானமாய் செவ்வாய் மொழியழகு,
சோடிக்குயிலாய் பாடிய காதல் அழகோ அழகு
இன்று ஒற்றைக் குயிலாய் கரையும் என்தன் பொழுது

காதலின் வடிவம் கண்டேன்-கற்பனையில்
இன்பம் கண்டேன், மாலையிடும் நாளை எண்ணி
மயங்குகிறேன் நம் காதலை எண்ணி, பாடியவனை
தேவதாஸாய் மாற்றிய திகட்டாத காதல் கனி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-3-2024

காதல் கங்கோத்திரி

காதலோ அருந்தவம்-நற்துணையோ
இறை வரம், பருவத்தில் கவர்ச்சியில் மயங்கி
விட்டில் பூச்சிகளால் காமத் தீயில்
வெந்து விளையாடும் வாழ்வோ விபரீதம்





இதயம் கீதம் பாட, ஏவாளைக் கண்ட
ஆதாமாய் மனம் மயங்க,
இவளின்றி வாழ்வில்லை, இவளே
இறை தந்த துணை மாயையானது

காதலராய் விளையாடிக் காமத் தீயில் குளிர் காய,
கன்னியர் கையில் கிடைத்த கரடிப் பொம்மையாய்
காளையர், காதல் கனவாக, தேவதாஸாய்
மாறிடும் கோலங்கள் பொய்யானது

பருவகாலக் கவர்ச்சியின் ஈர்ப்பு காதல் அல்ல
காமமே நிதரிசனமான உண்மை, காமம் கழிந்து
மோகம் மறைந்திட, காதல் பொய்யாய், கனவாய்
பழங்கதையாய் மெல்லக் கலைந்து போனது

கங்கோத்திரியாய் இதயங்களில்
பொங்கிப் பாய்ந்த காதல்-காலத்தே
வற்றிக் காய்ந்திட, ஒரு மனம் இரு மனமாக,
திருமணம் பாலைவனமானது





மணமிழந்த மணமாலை சருகானது-
நூலறுந்த காற்றாடி சோகப் புழுதியில் அல்லாட
விவாகம் இரத்தானது, திசைக்கொன்றாய்-சோடிப்
பறவைகள் பிரிந்து பறந்த கதை நிதரிசனமானது

நிலவைக் கண்டு அல்லியாய் மலர்ந்த
கன்னி நெஞ்சம் காயமானது,
காமன் விழா கொண்டாடிய உள்ளங்கள்
நீதி மன்றத்தில் பிரிவிற்காய் வழக்காடுது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-7-3-2024

காட்டிக் கொடுப்பும், மறுதலிப்பும்

ராபி வாழ்க! வாழ்த்தி முத்தமிட்டு
நசரேத் ஊர் இயேசு இவரே- காட்டிக் கொடுப்பாய்
எதிரிகளுக்கும் இயேசுவை காட்டி
சாட்சியம் பகிர்ந்த சீடன் யூதாஸ் ஸ்காரியோத்



காட்டிக் கொடுப்பான சாட்சியம்-குருத்துரோகமல்ல,
இறை சித்தம் நிறைவேற, நடக்கும் நாடகத்தில்
ஆட்டுவிப்பவன் கைப்பொம்மையாய் யூதாஸ்
காட்டிக் கொடுக்கும் கயவனாய் அவன் பாத்திரம்



அவரை அறியேன், மும்முறை மறுத்துச், சபித்தவரோ
தலைமைச் சீடர் பேதுரு, இயேசுவை மறுதலிக்கவில்லை
தம் சீடத்துவத்தை மறுதலித்தார், கோழைத்தனத்தை
உலகறியப் பறை சாற்றினார்

சொல், செயல், சிந்தனையால் தம்மை வெளிப்படுத்தும்
மனிதர், காட்டிக்கொடுப்பும், மறுதலிப்பும்
அவர்களின சுயரூபத்தைக் காட்டிக் கொடுத்திட
காட்டிக் கொடுப்பு, மறுதலிப்பிற்கு அப்பால் மனுமகன்

ஒளியாய் தம்மை ஆதியில் வெளிப்படுத்திய இறைவன்
ஓங்கார நாதத்தால் பிரபஞ்சத்தைப் படைத்து
வழியும், உண்மையும், வாழ்வும் "நானே"
மனிதம் அறிய மனுவுருவான இறைமகன்



யாரைத் தேடுகிறீர்கள்? காட்டிக் கொடுப்பை மறுத்து,
நசரேத் ஊர் இயேசு நான்தான், தம்மைக் காட்டிய கருணை,
வதைத்தோரையும், பழித்தோரையும் மன்னிக்கத்
தந்தையிடம் வேண்டிய மாகருணை

ஒளியைக் காட்டிக் கொடுக்க இருளுக்குச் சக்தியில்லை
ஒளியின் அழகு இருளில் தெரியும் உலகில்,
யூதாஸை நண்பா என்றழைத்த உறவு
குரு, சீடனாய் நிலைத்த உன்னத பண்பு

யூதாஸ் தன் சுயத்தை காட்டிக் கொடுத்தார்,
பேதுரு தன் ஆணவத்தைக் காட்டிக் கொடுத்தார்
தம்மைத் தாமே காட்டிக் கொடுத்தவர்களால்
மனுமகனைக் காட்டிக் கொடுக்க முடியாது

மரணத்தின் விளிம்பிலும், காட்டிக் கொடுப்பை
புறந்தள்ளி, நண்பா என பாசத்தோடு விளித்து
இயேசு தம்மை காட்டிக் கொடுத்தார்
உண்மை அச்சம் அறியாது



வாழும் இறைவனின் மகன் "நான்"
சத்தியத்திற்கு சாட்சியமாய் இயேசு-வார்த்தைகள்
இறை நிந்தனையானால், கல்லால் எறிந்து
கொல்வதே திருச்சட்ட நீதி

தன்னை அரசன் என்கிறான், பிலாத்துவிடம்
திருச்சங்கத்தின் முறைப்பாடு, சீசருக்கு எதிராய்
தன்னை அரசனாய் பிரகடனப்படுத்தல் புரட்சி, சதி,
சிலுவை மரணமோ தண்டனை மாறாத ரோம நீதி

அநீதத் தீர்ப்பு திருச்சங்கம் சூதாடிப் பெற்ற வெற்றி
"நசரேத் ஊர் இயேசு -யூதர்களின் ராஜா"
ஆளுநனின் குற்றப் பத்திரம்-நீதிக்கே தோல்வி



சத்திய புருஷனை கொன்றழித்ததோ சரித்திரம்
இயேசு நம் பாவங்களுக்காய் மரித்தார், பவுலின்
பாதையில் வழி தவறிய சீடர்களின் இறையில் மந்திரம்

நம் பாவங்களுக்குப் பரிகாரமாய்த்-தன் மகனை கொல்லுமளவிற்கு
இறைவன் கொடியவரல்ல, கடவுள் அன்பாயிருக்கிறார்,
அன்பில் நிலைத்திருப்பவர். கடவுளில் நிலைத்திருக்கின்றார்,
கடவுளும் அவரில் நிலைத்திருக்கின்றார்-நம்பிக்கை கடந்து
வாழ்ந்தறியும் உண்மையோ இறைவன்

உலகின் ஒளி நீங்கள், உங்கள் ஒளி ஒளிர்வதாக
உங்கள் உப்பு நீங்கள், உலகைச் சாரமாக்குங்கள்
உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்
இயேசு பெருமானின் மாறாத திரு மந்திரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-03-2024

மதமும், ஆன்மீகமும்

பேரினவாதிகளின் அரசியல் மேடையில் இனவாதம் கக்கும்
சீவர ஆடைகளுக்கு முதல் மரியாதை, நாட்டைக் கொள்ளையிட்டு
வங்குரோத்துக்கு ஆளாக்கிய தலைவர்கள் தலதா,
போதியை வழிபட, பௌத்த பீடாதிபதிகளின் ஆசிர்கள்



அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம்களைக் கொன்று,
கப்பம் பறித்த பயங்கரவாதிகள்-அரசியல்
தலைவர்களானபோது, மேடைகளில் மதவாதிகளின்
முதல் மரியாதை, சத்தியத்திற்கே அவமரியாதை?



இன்றும் அதிகார நாற்காலிகளுக்கு ஆராதனைகள்
கற்சிலைகளுக்கு அபிஷேகங்கள்
கடையிலிருந்தால் கல்லும் சிலை, கருவறை
அமர்ந்தால் அதுவோ வழிபடத் தெய்வமான நிலை

நித்தியானந்த, சக்கி வாசுதேவ், போல் தினகரன்
பசுத்தோல் போர்த்திய ஓநாய்களின் பக்தி வேடங்கள்
பணம் பறித்து ஏழைகளைச் சூறையாடி, சாமியென்றும்,
சற்குரு என்றும், தீர்க்கதரிசி என்றும் பட்டங்கள்

மதவாத மத்திய அரசை விலைக்கு வாங்கி,
சத்தியத்தை ஏலமிடும் போலிகள்-
மந்தைகளை வேட்டையாடும் பசுத்தோல்
போர்த்திய ஓநாய்கள்

ஆண்டகை கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் வெள்ளி விழாக்
கொண்டாட்டதில் அதிதியோ கொலைகார அரசியல் வாதி
சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திறப்பு விழாவிலும்
அதிதிகளோ அரசியல் வாதிகள் நகைப்பிற்கிடமான கேலி

சான்றோர் அமரும் மேடையில்-சாக்கடை
மேயும் பன்றிகளுக்கு முதல் மரியாதை
புண் மொய்க்கும் ஈக்கள்- தேன் மலர் மொய்க்கும்
மதுகாரிகள், என்றும் மாறாத யதார்த்தங்கள்

சிரை மழித்து, காவி தரித்தாலும், சிலுவையணிந்தாலும்
சிந்தையில் இனவாதம், மதவாதம், பதவி மோகம்,
எளியோர் மதியை முடக்கி, இருளில் இருத்தி
விழிப்புணர்வை அழிக்கும் வேசித்தனம் மதவியாரம்

போதிமாதவன் விநாயகனாக, பாபர் மசூதியை
இடித்து இராமர் கோயில் எழுப்பி, அழுகைச் சுவரிலும்
அல் அ.்.க்ஸா பள்ளியிலும் அழுதாலும், தொழுதாலும்
தூய மனமே இறைவாழும் இல்லம்

பெருமான் இயேசுவின் காலத்தே-சடங்கு,
பலி, சட்டமாய் நாறிய மதவாதம்
வணிகமும், கள்வர் குகையுமான ஆலயம்
மதவாதிகளுக்கு இன்றும் மாறாத திமிர்வாதம்

கள்வர் குகையான ஆலயங்கள் கல்லின் மேல்
கல் இராதபடி இடிக்கப்படும்-இன்றும் பொய்க்காத
சத்தியம்-சத்திய புருஷனுக்கோ மதவாதம்
வழங்கிய முதல் மரியாதை சிலுவை மரணம்

சாதியத்தை நியாயப்படுத்தும் சனாதனம்
சண்டாளர் அரசியல் தலைவரானால்-மண்டியிட்டு
மாலை போடும் வேசித்தனம்-பாவி என்னைத்
தொடாதே பரமஹம்ஸரின் கீர்த்தனம்

சாதியம் கடந்திட பதவி போதுமோ? இந்திர
பதவி கிடைத்தால் நகுஷனும் தேவேந்திரனோ?
பல்லக்குச் சுமந்திட சப்த ரிஷிகளோ?-
இந்திராணியும் கூடிக் சல்லாபிக்கத் வேசியோ?

மனிதன் உலகை எல்லாம் வெற்றி கொண்டாலும்
தன்னை இழந்தால் என்ன பயன்?
குருடனுக்கு குருடன் வழி காட்டக் கூடுமோ?
இருவரும் குழியில் விழுவதை தடுக்க முடியுமோ

வாக்கெடுப்பிற்கு பிலாத்து மண்டியிட்டதால்
சத்திய புருஷனுக்கு சிலுவை மரணம் தீர்ப்பானது
குருஷேத்திரத்தில் வாக்கெடுப்பு நடந்திருந்தால்-வெற்றி
கௌரவருக்கே கிடைத்திருக்கும் மாறாதது

இன்றும் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்
பெரும்பான்மையின் கூக்குரல், ஒடுக்கமான வாசலோ
சத்தியத்தின் வழி, நிறுவனமான மதம் கடந்த
ஆன்மீகமோ தனி மனித நெறி

கேட்கச் செவியுள்ளேரே கேளுங்கள்
காண விழியுள்ளோரே காணுங்கள

இறைமகனால் இறங்கி வா, மதவாதிகளின் கேலிக்கை,
சத்தியத்தை சிலுவையில் அறைவதோ மதவாதத்தின்
வாடிக்கை, தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்,
எளிய மனத்தவருக்கே இறையரசு மனுமகனின் போதனை

கார் காணாது கலாபமயில் ஆடாது,
கதிர் காணாது பங்கயம் முகம் மலராது
தேன்மலருக்கு வழிகாட்டும் தேனியின் நடனம்
பிணமிருக்கு இடம் நாடும் கழுகுகளின் கூட்டம்



ஒரு தலை முறையிலிருந்து மறு தலைமுறைக்கு
விழிப்புணர்வென்னும் ஞான தீபத்தை எடுத்துச் செல்பவனே
மெய்யான துறவி-ஏனையோர் காவியணிந்த போலிகளே
கர்ச்சிக்கும் லாமா, லொப்ஸ்ரம் லம்பா துறவி

சத்தியத்திற்கு குரல் கொடுக்காத மதங்கள்
சிலைகளை, சித்திரங்களை வழிபடும் அலங்கோலம்
அண்ணகர் அர்ச்சகராக-அடிவருடிகள் பக்தர்களாக
அலங்கார பூஜைகள்?, அபிஷேகங்கள் வேடிக்கைகள்

தெருவில் வைத்தால் விவேகானந்தரும்
பார்த்துக் கடந்திட கற்சிலைதான்,
நெஞ்சில் வைத்தால் -வாழ்வில்
ஆன்மீகப் புரட்சியின் அலைதான்



அதிகாரம் வந்தால் அற்பனுக்கும் அதிதி அந்தஸ்து
முகஸ்துதிபாடும் அந்தணருக்குச் சத்தியமும் பம்மாத்து
“துறவிக்கு வேந்தனும் துரும்பு”- அரசியல்வாதிக்கு
காவியும் வாக்கு வங்கிக்கு “துருப்புச் சீட்டாய்” இன்று

பத்து நல்லவர் இருந்திருந்தால் சோதோம், கொமோரா
அழிந்திருக்காது, பத்துச் சான்றோர் அமர்ந்திருந்தால்
சத்தியம் களிகூர, நீதி நிலைத்திருக்க, மனிதம் தழைத்திட
கொண்டாடும் விழாவோ சத்சங்கமாய் மாறியிருக்கும்

பத்து நல்லோரைத் தேர்வது அரிது, பல நூறு அதிகாரிகளை,
அரசியல்வாதிகளைத் தெரிவது எளிது, இறைவனுக்குத்
தெரிந்த உண்மை, சத்தியம் தரிசனம்-வாய்மையே வெல்லும்
அன்பே தெய்வம், உண்மை விடுதலை அளிக்கும், கதையானது

தூங்குபவனை எழுப்பலாம்-தூங்குவதுபோல்
பாசங்கு செய்பவனை எழுப்ப முயல்வது மடத்தனம்

கடவுள் என்பதோ கற்பனை, மலிவாய் விற்றுப் பிழைத்திட
மதவாதிகளுக்கு வேதங்களோ மாய ஒப்பனை
கட, உள்ளே என்பதே மெய்யான நிபந்தனை
உன்னை அறியும் மெய் அறிவே மனிதா உன் விடுதலை

தேடுங்கள் கண்டடைவீர்கள்
கேளுங்கள் கொடுக்கப்படும்-தட்டுங்கள்
திறக்கப்படும்- மனிதா சங்கநிதியோ
உன்னுள்ளே, கட உள் கடவுள் நீ



உன்னைத் திருத்து, உலகம் தானே திருந்தும்
பொய்யானது?, அமைதி கனவானது
நாளும் தொடங்கும் யுத்தங்கள் சவாலானது-சிந்திட
இரத்தம் மலிவானது, மதம் அபினியும், போதையுமானது

கள்வர் குகையான ஆலயமும்
சோதோம், கொமோராவும் நம் இதயமே
நம் அழிவுக்கு நாமே காரணம்-
தூய உள்ளமே இறையில்லம்

என்று தணியும் எங்கள் ஆன்மீக தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின்
அரசியல், மதவாத, இனவத மோகம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க, எல்லோரும் நலம் வாழ்க
Pax Ravichandra- 27-03-2024

மதவாதம்

மதம் பிடித்த யானையின் கால்களிலோ இரும்புச் சங்கிலி-
மதம் பிடிக்கச் சிறுமியின் கழுத்திலோ-உறவுகள் கட்டிய
சிலுவையோடு கூடிய அலங்காரத் தங்கச் சங்கிலி





கூடி விளையாடி, ஒன்றாய்ப் படித்த பள்ளிகள்
பாசத்தோடு நட்பை வளர்த்த உறவுகள்-இன்றோ
பொய்யாய், பழங்கதையாய் மாறிய நிகழ்வுகள்

நெஞ்சில் சிலுவை, நெற்றியிலே நீறு, தலையிலே
குல்லாய், வெண்ணிற ஆடை அணிந்து தொழுது
ஆலயம், கோயில் பள்ளி, விகாரைகளில்
கூடிக் குலாவிய எல்லோரும் அன்றோ நண்பர்கள்

மதவாதம், இனவாதம் வளர்த்த விபச்சார குலச்சந்ததி,
மனிதத்தைப் பிரித்தாள, மேடையிலே கக்கிய இனத்துவேஷம்
பள்ளியிலும், கோயிலிலும், ஆலயத்திலும், விகாரையிலும்
எதிரொலிக்க நட்பு மனங்களில் ஆக்குரோஷம்





மதம் பிடித்த யானைகளும் குணம் பெறக் காலமுண்டு
இன, மதம் பிடித்த மனங்கள் குணம் பெற யுகங்களுமுண்டோ?
புத்தர், இயேசு, அல்லா, கிருஷ்ணா மொழிந்தவை பழங்கதை
இன, மதப் பயங்கரவாதமோ உலகை ஆளும் அவல நிலை

அன்பே சிவம், உண்மையே தெய்வம் மறந்த மனிதம்,
மதம் வளர்த்து, திமிர் பிடித்து, உண்மை இறைவனை,
உண்மையிலும், ஆவியிலும் வழிபட மறந்த அவலக் கதை

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்,
வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுர வாசல்-
தெள்ளத் தெளிந்தாருக்கு சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே-

புரிந்தவனுக்கு மதம் எதற்கு? மார்க்கம் எதற்கு?
மனிதா தெய்வீகம் உனக்குள்ளே-
உள்ளுணர்வில் உயர்ந்தால் நீயும் அதுவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-5-3-2023

ஓநாய்களும் மந்தைகளும்

கள்வர் குகையான ஆலயம்-கல்லின்மேல்
கல் இராதபடி இடிக்கப்படும், இறையன்பால்
கொதித்த இளநெஞ்சம், கசை எடுத்து-தந்தையின்
இல்லத்தை குட முழுக்குச் செய்த அபிஷேகன்



உண்மை, அன்பு, விழிப்புணர்வில் நிலைத்து, வாழ்வால்
உண்மை இறைவனை வழிபடுங்கள்-நம்பிக்கை
கடந்த, வாழ்ந்தறியும் சத்தியமே இறைவன் முழங்கிய
அகக்கிளர்ச்சியாளனைக் கொன்றதோ மதவாதத் திருச்சங்கம்

கிறிஸ்தவர்களை வதைத்து, கிறிஸ்துவின்
போதனையை திசை மாற்றி, ஸ்தேவானின்
கொலையில் பங்கேற்ற பவுலோ பரிசேயன்



ஏழு முறையல்ல எழுபது முறை ஏழு மன்னியுங்கள்
குருவின் வார்த்தையைப் புறந்தள்ளி, அனனியா,
சப்ராவைக் கொன்ற பேதுரு, திருச்சபைக்குத் தலைவர்,
மறுதலிப்பும், காட்டிக் கொடுப்பும் மாறாத நிகழ்சி நிரல்

சிந்தனையாளர்களுக்குச் சிறைவாசம், சத்தியத்தின்
சாட்சிகளுக்கு எரி மரணம், சிலுவை யுத்தம், மோட்ச
இராட்சியத்தை விற்ற மடத்தனம்-திருச்சபையின் கரங்களில்
குருதி, காற்றில் வரையும் சிலுவையிலோ புழுதி

அன்றும் ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள்
மந்தையை மேய்த்து வயிறு வளர்த்திட, மாறாத
கதை இன்றும் தொடர்ந்திட, மழைக்கு முளைத்த
காளான்களாய் பல்லாயிரம் சபைகள்

மதவியாபாரம் களை கட்ட, பசுத்தோல் போர்த்திய ஓநாய்கள்
மந்தையை வேட்டையாட, காணிக்கையாய் கொள்ளையிட்ட செல்வமோ
பலகோடி, இரவல் கழுதையில் பவனி வந்த மனுமகனோ ஏழை
சொந்த ஜெட் விமானத்தில் பறக்கும் போதனோ கேடி, கோடிஸ்வரன்

பேயோட்டிக், குணமாக்கி, காணிக்கையின் பெயரால்
ஏழையரைக் கொள்ளையிட்டு, அறியாமையைச்
சாதகமாக்கி, ஆளும் வர்கமாய்ச் பசுத்தோல்
போர்த்திய ஓநாய்களின் திருச்சபைகள்

வெண்ணாடை, கழுத்திலே சிலுவை, கையிலே விவிலியம்,
அலங்கார மேடைகளில் வசனத்தை வாந்தியேடுத்து
ஆர்ப்பரித்து புலம்பும் தீர்க்கதரிசனங்களோ கற்பனைகள்
பேயோட்டி, குணமாக்கும் நிகழ்ச்சி நிரலோ நாடகங்கள்



காவி தரித்தும், கன்னியாஸ்திரிகளை கற்பழித்த
வேசி மக்கள், சிறுவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த
காமப் பேய்கள், வழுவாத வரம் பெற்ற திருச்சபை
வழுக்கி விழுந்த வரலாற்றில் எத்தனை கொலைகள்?

அதிகார மோகம், வல்லரசுகளைத் தூண்டி,
நாடு பிடித்து , மதம் மாற்றி, கொள்ளையடித்த
கோடிச் செல்வமெல்லாம், கறையனும், கள்வனும்
அரித்து, திருட, கள்வர் குகையான திருச்சபை

உலக மகாயுத்தங்களில் வல்லரசுகளுக்கு சாமரம்
வீசிய பேடிகள், வெட்கித் தலைகுனிய, தொடர்ந்தும்
காட்டிக் கொடுத்து, மறுதலித்து சத்தியத்தைச்
சிலுவையில் அறையும் மத வேசித்தனங்கள்



நிறுவனமான மதம், மனிதா நிர்வாணத்திற்கு
இட்டுச் செல்லாது, ஆன்மீகம் தனி மனித
அகமுக யாத்திரை, இறையரசு உனக்குள்ளே
“வாழும் கிறிஸ்து நீ”

குருடனுக்கு குருடன் வழி காட்டக் கூடுமோ?
இருவரும் குழியில் விழுவதை எவராலும் தடுக்க
முடியுமோ, உன்னை நீ அறிவதே மெய்ஞானம்
உண்மையே விடுதலை அளிக்கும் மாறாத கீர்த்தனம்

உலகின் ஒளி நீ-உன் ஒளி ஒளிர்வதாக
உலகின் உப்பு நீ- உலகை வளமாக்கு

கிறிஸ்து நிலை உங்களுக்குள்ளே-இரண்டாம்
வருகை உன்னில்தான்-உன்னை அறிந்தால்
உள்ளுணர்வின் உச்சம் கிறிஸ்து நிலை
எளிய மனத்தவருக்கே இறையரசு மாறாத நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-03-2024

பாலிருக்கும், பழமிருக்கும், பசியிருக்காது

மதம் என்ன? மொழி என்ன?
மங்கையே உன் இனம் என்ன? தேசம் என்ன?
அடுக்கடுக்காய்த் தொடர்ந்த வினாக்கள்-அப்பாவிப்
பாலியல் தொழிலாளிக்கு புதிரான கனாக்கள்





தேசம் கடந்த தேகமே என் மொழி
காமத்தை தேடுவோருக்கு காமனும் கடவுளே
சாதி, மத, மொழி, இனம் கடந்த படுக்கை
வியாபாரம், சர்வதேச சந்தையான விவகாரம்

அன்னை தந்தையோடு வாழ்ந்த காலம் கனவானது
பள்ளி சென்று திரும்பும் வழியில்-கடத்தப்பட்ட வாழ்வு
கட்டாய பாலியல் தொழிலானது, வாழ்வு இருளானது
காமுகனுக்கு, காதல் மொழி புரியாத ஒன்றானது?

தேகமே என் சர்வதேச மொழி, ஏவாளே என் தாய்,
பலாத்காரமாய்க் கடத்தப்பட்டு-பாலியல்
சந்தையில் விற்கப்பட்ட பேதை, சொல்லொண்ணா
நரக வேதனை அனுபவிக்கும் பெதும்மை

ஆதாமின் ஆண் சந்ததிக்கு என் உடலோ மஞ்சம்,
பேதை, பெதும்பை அறிந்தும் சிறுவர்
துஷ்பிரயோகம் செய்யம் காமுகனோ சட்டம்,
சமயம் அறிந்தும் சிறுமியன் மனம் அறியாத அரக்கன்

விந்தை, துப்பிக் கழித்திட விளை நிலமாய்
சிறுமி என் உடல், விறைத்த குறி ஓயும் வரை
தொடரும் வல்லாங்கு, விழிகளிலே பாசாங்கு
நாளும் புது வரவு, ஓயாது தொடரும் வல்லுறவு

இசை மீட்க, இசைக் கருவியும், கலைஞனும் தேவை
சுருதி சேர்த்து, மீட்பதோ இசை-நாதம் அறியாத
காமுகனுக்கு விபச்சாரம் சரச சல்லாபம்-சிறுமியின்
ஈர விழிகளுக்கு கடவுளும், சாத்தானும் ஒன்றான பாவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-03-2024

பூப்பந்தாட வந்த பூவை

அந்தியில் பூப்பந்தாட வந்த பூவை
கண்களால் காதல் வலை வீசி
என் நெஞ்சை காதல் பூப்பந்தாடிய
சித்திரப் பாவை





நாளும் அந்தியில் வரும் சந்திராவைக் காண
அல்லி மலராய் என் தவம்-கண்டதும்
நெஞ்சம் காதலாகி இதழ்கள் விரித்தாட-மனதிலே
பொங்கும் ஆண்டாளின் ஆனந்தப் பாசுரம்

ஒரு நாள் வராவிட்டால், வாடி வதங்கி
ஏங்கும் மனம், மறு நாள் காண
பொங்கும் பூப்புனலாய்ப் பூத்தாடி
நெஞ்சம் கொண்டாடும் காதலர் தினம்

அழகைக் காணாத நாளில் கண் விழிக்காத
அல்லியாய் ஏங்கும் மனம், வெண் மேகமே தூது செல்,
தென்றலே என் காதலைச் எடுத்துச் சொல்
என வான் பார்த்து தவிக்கும் குணம்

வீட்டிற்கு அழைத்து விருந்து வைத்தாள், ஒரு நாள்
முழுதும் என்னருகே இருந்து-என்னைப் பார்த்து இரசித்தாள்,
மனதிலே பூத்த முதற் காதல், சொல்லத் தயங்கிய மனதால்
சோக வெள்ளம் தாக்கிட, இன்று நான் பாடும் பாடல்



என் சிநேகிதிக்கு காதலர் உண்டு-கண்டதும்
உங்களைப் பிடித்துப்போனது காதலல்ல பாசம்
தோழியின் வார்த்தையால் துவண்ட மனது
துார்ந்து, பாழூங் கிணறாய் மாறிய தினம்

இடமாற்றமும், தொடர்ந்த இனக் கலவரமும்
எம்மைப் பிரித்த இரும்புத் திரையாக
உண்மையறியாது ஊமைக்குயிலான தினம்
எங்கிருந்தாலும் வாழ்க என வாழ்த்தும் மனம்

நாளும் நெஞ்சில் உலாவிய பொட்டு வைத்த வட்ட நிலவு,
நாளும் வசந்தம் என பூ மழை மொழிந்த தேன் நிலவு,
நெஞ்சில் பூத்த முதல் நிலவு, ஆண்டுகள் ஐம்பது போனபின்னும்
எண்ணிக் கவிபாடும் மனதில் சோகத்தின் உறவு

இன்றும் மாறாத சோகம், நெஞ்சிலே ஓயாத விரக தாபம்,
சொல்லத் தயங்கிய காதல் சோகமானது, நெஞ்சம்
அடிபட்டு நொருங்கிய பூப்பந்தாய் ஆனது-எண்ணிடக்
கண்களில் கண்ணீர் முட்டுது, விதி வலிது மனம் புலம்புது

விழிகள் நீர் பொழிய மழை பொழியும் காலம்
காமன் கணைபட்டு நொந்தழ முதற் காதலின் அவலம்,
கோல மயிலும், பாடும் குயிலும் ஆடிப்பாடிட -காதலாகிக்
களித்த மனம், இன்றோ ஒற்றைக் குயிலாய் கரையும் தினம்

வட்ட நிலவாய் நெஞ்சில் உலாவிய பொட்டு வைத்த
பெண் நிலா, நாளும் வசந்தம் என காதல் மழை
பொழிந்த தேன் நிலா, இன்றும் நினைவில் மறையாத
காதல் நிலா, என் இதயத்தை திருடிய வசந்த உலா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-3-2024

புறாக்களும் வல்லூறுகளும்

அன்னை தந்தை என்னும் அன்பு நடமாடும்
திருக்கோயிலில் அரும்பிய அழகு முல்லை-நாளை
ஊரும், வீடும் திருநாளாய்க் கொண்டாட
பூத்து மணம் பரப்பக்காத்திருக்கும் வாச முல்லை



பள்ளி சென்று திரும்புகையில், வல்லூறுகள்
கடத்திய கிள்ளை, ஊர், பெயர் தெரியாத
இடத்தில் கூண்டுக் கிளியான பிள்ளை



கதிர் தொட்டு கண் மலர்க எனச் சொல்ல
இதழ் விரித்து மணம் பரப்பக் காத்திருந்த மல்லிகை
காமுகரால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி
நாளும் கண்ணீர் சிந்தும் பிள்ளை



தேன் மலர் மொய்க்கும் மதுகாரிகள்
தேன் மலரைச் சிதைப்பதில்லை-சிறுவர்
துஷ்பிரயோகம் செய்யும் காமுகரால், உடலும்,
மனமும் ஊனமாக வாடி வதங்கிய முல்லை

Pedophilia is a psychiatric disorder in which an adult or older adolescent is primarily or exclusively sexually attracted to prepubescent children. It is considered a paraphilia, which is a condition characterized by abnormal sexual desires.

கண்ட இன்பக் கனவுகள் கலைந்திட, அன்னை, தந்தை
உறவு கண் மறைந்திட இறகொடித்து, சிறைப்பட்ட
புள்ளிக் குயில் இசை மறந்த கூண்டுக் குயில்

கேவிக் களைத்து, நாளும் வல்லாங்குக்
ஆளாகும் கிள்ளை, ஆடையிழந்து
அம்மணமாகி, காமம் தீர்க்க-வயோதிபனுக்கும்
நொருக்குத் தீனியாகி நொந்தழும் பிள்ளை



பூ மேனி நசங்க, மலையரவமாய் ஊர்ந்து படர்ந்து,
உணர்வு பொசுங்க, உள்ளம் நொருங்க நாளும் காம வதை,
குழந்தை இயேசுவை சிலுவையில் அறையும் கொடிய கதை

குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்-அவர்களைத் தடுக்காதீர்கள்
ஏனெனில் இறையரசு இத்தகையோருக்கே உரியது-குழந்தைகளைப்
பாவத்தில் விழச் செய்வோர் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி,
ஆழ் கடலில் எறிவது அவர்களுக்கு நல்லது, கேட்பாரற்ற செய்தியானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-3-2024

இறை நீதி- சூசான்னா





இடை தொட்டு விரிந்த மதுமலர்க் கார் குழலில்
இவளோ தோகையின் சாயல், நடை கண்டு
அன்னமும் மயங்க, மலர் முகம் பங்கயமோ என
வான் நிலவு வியக்க, நங்கை சூசான்னாவின் எழில்

பூங்குவளை விழிகள், முல்லை மொட்டுப் பற்கள்,
தேன் சிந்தும் கொவ்வை இதழ்கள், பூ வாசம்
வீசும் பொன் மேனி, கன்னங்களோ செம்மாங்கனி
கவிதைக்குள் அடங்காத காதல் தேன் கனி

நூலிடையில் மேகலை, பூங்கைகளில் பொன் வளை
நடையோ நாட்டியமாக நாதமிசைக்கும் கொலுசு
காண்போர் நெஞ்சம் கொட்டும் காதல் முரசு-அழகியோ
செல்வர் ஜோக்கீமிற்கு இறையளித்த காதல் பரிசு

பார்க்கத் திகட்டாத அழகோ பூவனம்,
பருவம் பூத்த மேனியில் வசந்தத்தின் நறுமணம்
செந்தேன் மொழியிலே குயிலினம்
கண்டவர் நெஞ்சில் மலரும் காதல் பூவனம்



கண்ட மூப்பரோ நடுவர், காமத் தீ எரிக்க
அணைக்க, வழி தெரியாத கயவர்
சதி செய்தார், வதியை சல்லாபிக்க-ஒரு வழியாய்
அவள் உலவும் தோப்பில் ஒளிந்து நின்றார்

மூப்பு மலாந்தும் ஞானம் பூக்காத உள்ளத்தை
பற்றி எரியும் காட்டுத் தீயாய் காமம்
நீதி இருக்கையில் அமர்ந்தும்-பிறன் மனையை
சூறையாட எண்ணிய மனங்களோ ஈனம்

மாலையில் உலாவ வந்த மங்கை, பணிப்பெண்களைப்
பணித்தார், எண்ணெய்யும், சவர்க்காரமும் எடுத்து வாருங்கள்,
தாங்கமுடியாத வெப்பம், நீராடினால் சூடு தணியும்
கண்ட அழகில் காம வெப்பம் தலைக்கேற தடுமாறிய மூடர்

ஆடை அவிழ்த்து நீராட அழகி முயல-கண்படும் அழகில்
காமம் அவிழ்ந்து மூப்பர் கண்களை மறைக்க,
காமத் தீயில் வெந்து கருகிய கயவர், திருச்சட்டம் மறந்து
அநீதியாய் பெண்மையை சூறையாட முயன்ற காமுகர்

ஆடை களையும்போது மறைவிடம் விட்டு ஓடி வந்த
காமப் பேய்கள்-ஆசை காட்டி, இச்சகம் பேசி, அழகை
விழிகள் உண்ண, ஆசை மனம் கூடி மகிழ எண்ண
காமவெப்பத்தால் தகித்த நயவஞ்சகர்

சேடிகள் செல்ல அனுகிய கேடிகள், எம் பேச்சைக் கேட்டு
எம்மோடு சல்லாபித்தால் எமக்கோ உல்லாசம்
இச்சை தீர்த்தால், உயிர் பிச்சை உனக்கு , இல்லையேல்
விபச்சாரி நீ என்ற தீராப் பழியில் மரணமே உனக்கு



வேடன் வலைப் பட்ட புள்ளி மானாய் மங்கை,
விழிகளிலோ பாயும் துயரக் கங்கை, தப்பிக் வழியன்றி
தவித்த நங்கை, துகிலால் மெய் மறைத்து
பொய்யுரைக்கும் கயவரை மன்றாடிய மங்கை



கற்பே பெண்மைக்கு மேன்மை-கயவரே உங்கள்
இச்சைக்கு இணங்கினால் என் வாழ்வோ சிறுமை
இறைவனிடம் சரணடைந்த பெண்மை, இறைவன்
காப்பார் என்பதோ உண்மை, நம்பிய நங்கை

தப்பிக் வழியின்றி மாட்டிய கிள்ளை, தரங்கெட்டு
தன்னை இழக்க விரும்பாத முல்லை, இறைவன் காப்பார்
நம்பிக்கையோடு கத்திய பிள்ளை, வீட்டாரும், சேடியரும்
ஓடிவரப் பொய்யுரைத்த நீதிபதிகளால் நீதிக்கே தொல்லை



கண்டோம் இவளை, கள்ளக் காதலனோடு உறவாடக் கண்டோம்,
சேடியர் தோட்டக் கதவை அடைத்து உள்ளே சென்றிட
கள்ளக் காதலனோடு உல்லாசமாய் இருந்தாள், எம்மைக் கண்டு
காதலன் தப்பி ஓட, காரிகையோ கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டாள்

ஊரார் அறிந்த உத்தமி, எளியோர் இடுக்கண் களையும்
பெருமாட்டி, விபச்சாரி எனப் பழி சுமக்க, கண்ணீர் வடிய
ஊரும், உறவும் மனமுடைந்து நிற்க, உத்தமியோ
குற்றவாளி, காமக் கயவரோ நீதிபதி?

சிக்கலான சூழ்நிலையில் ஊரும், உறவும்
சூசான்னாவைக் காக்க வழியின்றித் தவிக்க,
“தோராவை” நன்கு அறிந்த சூசான்னாவின் சொல்லை
ஆணாதிக்க உலகம் ஏற்க மறுத்த அவலம் அன்று

பெண்மையை போகப் பொருளாய் கருதும்
ஆணாதிக்க உலகம், தாய்மையோ தெய்வீகம்

மறு நாள் கூடிய நீதி சபையில், குடும்பத்தாரோடு
கண்ணீர் மல்க வந்த தாயோ வண்ணம் குலைந்த ஓவியம்
கண்ட நல்நெஞ்சங்கள் உருகிப் புலம்பிட- இச்சைக்கு
இணங்க மறுத்தவளைக் கண்ட கயவர் மனதிலோ ஔவியம்



கண்ணால் நாம் கண்டோம், கள்ளக் காதலனோடு, அழகி
உறவு கொண்டதைக் கண்டோம், ஓடி மறைந்த
காதலனைக் கைது செய்ய முதியவர் எமக்குப் பலமில்லை,
காரிகையோ குற்றவாளி, விபச்சாரிக்கு மரணமே நீதி

மூப்பராய், நீதிபதிபதியாய் ஆணவம் நிலைக்க
விறைப்போடு உரைத்த குரல், இறைநீதியை பழிக்க
நீதிக்கே அநீதி செய்து கதை கட்டி உரைத்த பொய்யை
ஊரார் நம்பிட, மரண தண்டனை மங்கைக்கு உறுதியானது

இறைவா நீதான் அபலைக்குத் துணை, உண்மையை
யாவரும் அறிய அருள் புரியும் உம்மை நம்பினேன்
என்னைக் காப்பாய் கண்ணீர் மல்க கதறிய அபலை

அபலையின் கண்ணீர் வேண்டுதல் இறைவனைச் சேர,
ஆவியின் வல்லமை தானியேலைத் தூண்ட
இவர் இரத்தப் பழியில் எனக்குப் பங்கில்லை, உராரும்,
உறவும் திரும்பிப் பார்க்க உரத்துக் கத்திய இளைஞன்



இறை நீதி வழுவாதது, புனிதமானது நாமறிய
வழக்கை ஆராயாமலும், உண்மையை அறியாமலும்
ஒருவரை குற்றவாளி எனத் தீர்பிடல் முறையாகாது

ஊராரே வாருங்கள் உண்மையை அறிந்திட
ஒளிவு மறைவின்றி நடத்துவோம் ஓர் விசாரணை
இறை தந்த திருச்சட்டம் புனிதமானது-தவறாய்
ஒருவரைக் கொல்லல் கொடிய பாவமானது

ஓங்கி ஒலித்த இளைஞனின் ஆட்சேபனை
கூட்டத்தை கட்டிப்போட்டிட, தண்டனை நின்றது
நீதியான விசாரணை ஊர் அறிய, உறவறியத்
தொடங்கியது, உண்மை நிதரிசனமானது

அழகு கண்களை மறைத்தது, காமம் மனச்சாட்சியை எரித்தது
நீதியைப் மறைத்துப் பழித்து-அபலைக்கு மரணத் தீப்பிட்டது பெருங்
குற்றம், வினை விதைத்தவன் வினையை அறுத்திட-நொருங்குண்ட
இதயத்தின் குரலை இறைவன் புறக்கணிப்பதில்லை மெய்யானது

மூப்பர் இருவரையும் தனித்தனியாய் பிரித்து வைத்து
எவ்விடத்தில் கண்டீர் பாவச் செயலை, ஒருவன் உரைத்தான்
விளா மரத்டியில், மற்றவன் உரைத்தான் கருவாலி மரத்தடியில்
உண்மை வெளிப்பட, பொய்மை மறைந்திட, ஆனந்தம் நிலைத்தது



மாசற்றவர்களையும், நீதிமான்களையும், சாவுக்கு
உள்ளாக்காதே இறைவன் கூறியிருந்தும், காமம் கண்களை
மறைக்கத் திருச்சட்டத்தை மீறினீர்கள்-உங்கள் தீர்ப்பே
உங்களுக்கு உரித்தாகட்டும், நீதி நிலைக்கட்டும்

காமம் கண்களை மறைத்திட கேடிகளே, அழகு
உங்களை அதல பாதளத்தில் வீழ்த்திட
இறைவனுக்கு அஞ்சாமல் உத்தமியின் மேல் பெரும் பழி
சுமத்திக் கொல்ல நினைத்தது பெரும் பாவம்

குற்றச் சாட்டை நிருபிக்க சாட்சிகள் இருவர் வேண்டும்
இரு சாட்சியங்களும் உண்மைக்குச் சான்று பகிரவேண்டும்
குற்றத்தை ஆராய்ந்து நீதி வழங்வேண்டும்
நிரபாராதியை எப்போதும் நீதி காக்க வேண்டும்

பொய்யுரைத்து தன் சகோதரனை அநியாயமாய்க்
குற்றம் சாட்டியவன் குற்றம் நிரூபிக்கப்பட்டால்-அவன்
தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்ததை
அவனுக்கே செய்யுங்கள்-தீமையை அகற்றுங்கள்

உண்மையை நிலை நாட்டி, இணைச் சட்ட நீதியை
தானியேல் இயம்பி, தீமையை அகற்றிட
தானியேலின் ஞானத்தை புகழ்ந்த உராரும், உறவும்,
சூசான்னாவின் கற்பைப் போற்றினார்



அபலையை கொல்ல நினைத்த கயவரைக் கொன்று
நீதி விளங்கிட , தீமை மக்கள் நடுவில் நின்ற அகன்றிட
கருணை வடிவான இறைவன் என்னைக் காத்தார்,
இறைவனை மனதாரப் போற்றி மகிழ்ந்த சூசான்னா

நற்சமூகமாய் , இறை மக்களாய் வாழ மோசே வழியாய்
இறைவன் வழங்கிய திருச்சட்டம் காக்கும் அரணானது,
இறையரசுக்குச் செல்லும் பாதையானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-03-2024

தேனீ





வண்ண அழகோடும், வாச மணத்தோடும்,
சுவைக்கச் சுவைக்க நாவினிக்கும் அமுதை-தேனீக்கு
அள்ளி வழங்கி இன்புறும் மலர் வாழ்வோ
பொழுதோடு புலர்ந்து, பொழுதுதோடு மடிந்திடும்
சிறு பொழுதானது, எண்ணிடத் தேனீ மனம் நொந்தது

மலரின் வாழ்க்கை தொடர்ந்திட,
அயன் மகரந்தச் சேர்க்கையால்-மலரைக் காயக்கி,
கனியாக்கி பல்கிப் பெருகிட ஆசீர் வழங்கும்
இறைவனாய் மாறித் தேனீ, மனம் மகிழுது

அமுது அருந்தும்போது மலருக்கு நோகாமல்
அன்னையிடம் அமுதருந்தும் குழந்தையாய்த் தேனீ
அள்ளி வழங்கி இன்புறும் அன்யைாய் வண்ணப்
பூவின் வாசம் சொட்டும் மேனி -மதுகாரிக்குத் தெரிந்த
இரகசியம், மானுடம் புரியாத அன்பின் அதிசயம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-03-2024

தூங்காத உள்ளம்



ஊர் உறங்க, உலகுறங்க, உறங்காத நெஞ்சில்
நிலவாய் காயும் உன்தன் நினைவு, என்தன் தேன் நிலவே
என்னைத் தீய்க்கும் தீயானதென்ன? எண்ணிட மனம்
குமுறுவதென்ன?, விழிகள் ஈரமாவதென்ன?



வானுறங்க, வையகம் உறங்க, தனியாய்
காய்ந்து தேயும் நிலவாய் என் மனம்
தேய் பிறையை காணும் உனக்கு, பௌர்ணமியே
என் காதல் புரியும், என் மனமும் தெரியும்

ஒற்றைக் குயிலின் கானம் கேட்டிருந்தால்
என்தன் மனச்சோகம் புரிந்திருக்கும்
தனியே அலையும் மேகத்தை கண்டிருந்தால்
என் தூதை உன் மனம் அறிந்திருக்கும்

கங்கையை கண்ணில் வைத்து, காங்கையை
அடிவயிற்றில் வைத்து, மங்கையை நெஞ்சில் வைத்து,
இதயம் பாடும் என்தன் இதய கீதம்-கண்மணி
உனக்கு கேட்கவில்லையா? காதல் புரியவில்லையா?



பாடி அழைத்தும் என்தன் சோடிக்குயிலிடம்
பதிலில்லை, ஆடி அழைத்தும் என் வண்ணத் தோகை
ஆட வரவில்லை, கணைபட்டு நோகும் மனம், தீயில்
விழுந்த புழுவாய் துடிக்கும் இதயம்

கண்களால் நீ என் நெஞ்சில் தூவிய முதற் காதல்,
காலம் பல சென்றும் என் கண்ணீரால் தளைப்பதென்ன?
என்தன் சோடிக் குயில் என்னை விட்டுப் பிரிந்த பின்னும்,
என் மனம் ஒற்றைக் குயிலாய் கரைவதென்ன

நினைந்துருக என் நெஞ்சில் உன்னைத் தவிர வேறு நினைவில்லை,
முதற் காதலோ வாடா மல்லிகையாய் நெஞ்சில் மணம் வீசிட
இனியொரு காதல் எனக்கு எதற்கடி கண்ணம்மா?,
காதற் சோகம் தரும் கவிதைச் சுகம் பேரின்பமடி செல்லம்மா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16-03-2024

வறுமை



ஓலைக் குடில், களி மண் தரை, சுற்றிலும்
ஓங்கி உயர்ந்து வளர்ந்த தென்னந் தோப்பு
பசியில் நிலைத்த ஏழையின் குடியிருப்பு-குழந்தைகளோ
இறை தந்த செல்வம் என்ற பெற்றோரின் நிலைப்பு



உதிரும் மட்டையும், தேங்காயும்
விற்றுப் பிழைத்திடும் வாழ்வாதாரம்
ஒரு வேளை உண்டு, இருவேளை நோன்பிருக்கும்
உடலில், பசி, கந்தையின் ஆரவாரம்

பசியால் குரல் எழுப்பி, பட்டினியால்
உறங்கிடும் குழந்தைகள், தேங்காயை உண்டு
இளநீரைக் குடித்துப் பசியாற்ற, வானுயர்ந்த
தென்னையோ எட்டாத உயரம்

குளிருக்குப் போர்த்த தாயின் சேலையில்
நூறு பொத்தல்கள், தூங்கிடப் பொத்தல்
கூரை வழியே கண் சிமிட்டித் தாலாட்டும்
ஆயிரம், ஆயிரம் நட்சத்திரங்கள் சொந்தங்கள்?

தாயின் விழிகளில் தேங்கி நிற்கும் கண்ணீர், தந்தையின்
தேகத்தை நீராட்டும் வியர்வை, மனைவி, மக்களைக் காக்க நாளும்
மண்ணோடு போராட்டம், வறுமையோ ஓயாத ஆர்ப்பாட்டம்
மலரும் இருளில் காதலரின் கொண்டாட்டம்



பசியை வெல்ல மருந்தில்லை, மாத்திரையில்லை
காதல். பாசம் தந்த உறவு, கடுமையாய் உழைத்திட
நோயால் வாடிய உறவு, கீரையும், கூழும் உண்டு
பிடிச் சோற்றுக்காய் ஏங்கும் பிள்ளைகளின் மனது

ஏன் பிறந்தோம் என்பதோ கேள்வி ? வறுமை வாட்டுவது
என்ன நியதி, கும்பிட்ட சாமிகள் படங்களானார், கோயிலும்,
ஆலயமும் செல்ல கந்தையோ தடையானது, கிழிசல்
புடவையில் வறுமை, பிய்ந்த பாயிலோ காதலின் அருமை

வறுமையின் உச்சத்தில் தந்தையின் உடல் தளர, தாய்
மனம் நொருங்க, இளமேனி மேயும் காமக் காளைகள்
விழிகளில் இந்திரனின் மோகம், கிழிசல் புடவையில்
இந்திரனை வருத்தும் அகலிகையின் நூறு பாவம்



இரு வேளை உண்டு, குழந்தைகள் களிக்க
தாய் உள்ளம் கற்பை விற்றுப் பிழைத்தது
சோற்றுப் பானை அடுப்பில் கொதிக்க-கொதிக்கும்
தந்தை மனம் ஆற்றாமையால் விரக்தியில் நிலைத்தது

காலவெள்ளத்தில் தந்தை மரிக்க, புல் வளர்ந்து,
குடிலை நாற்புறமும் நெரிக்க, கூரை வழியே
கூவிப் பெய்யும் மழை, குடிசையில் குந்தி இருந்து
வானை வெறிக்கும் தாய், பிள்ளை

அரளி விதையை அரைத்து, அன்போடு கஞ்சி காய்ச்சி
அன்னை ஊட்டிட அமுதாய் உண்ட இராவுணவு,
ஆடிப் பாடி அணைத்துக் களித்து, கிழிந்த பாயில் உறங்கிய
ஏழைகளுக்கு சாவோ அறியாத் தூக்கத்தில் பெரும் வரவு

வாழக்கை கடவுள் தந்த வரமா? வறுமை
ஏழைகளுக்கு தீராத சாபமா? உயிர்
மெய்யொடு ஒட்டிப் பிறந்த பசியும், காமமும்
உயிர் பிரிந்தால் மறையும் தீராத ரோகமா?

புல்லும், களையும், கறையான் புற்றும் வளர்ந்து காடாக,
கண்ணில் மறைந்த ஏழையின் குடிசை, ஏழைகளின்
வாழ்வில் வறுமை தீராத கொடுமை, காலவெள்ளத்தில்
எல்லாம் மாறும் மாறாத உண்மை,

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-03-2024